செ.வெ.எண்: 14 நாள்:06.09.2021

**கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளை கண்டறிதல் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைப்பதை ஊக்குவித்தல்" என்ற இரு உயரிய கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்வதே இந்த வருட தேசிய ஊட்டசத்து மாதத்தின் முக்கிய நோக்கம்.**

**திருப்பூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் 10,407 கர்ப்பிணி தாய்மார்களும் 8,972 பாலூட்டும் தாய்மார்களும் 1,02,715 குழந்தைகளும் மற்றும் பொது மக்களும் பயன்பெறுவர்.**

**தேசிய ஊட்டச்சத்து வார விழா கண்காட்சி மற்றும் பாரம்பரிய உணவு திருவிழாவினை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தகவல்!!!**

மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் இன்று (06.09.2021) திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டத்தின் சார்பில் போஷன் அபியான் திட்டத்தின் கீழ் தேசிய ஊட்டச்சத்து வார விழா கண்காட்சி மற்றும் பாரம்பரிய உணவு திருவிழாவினை துவக்கி வைத்து பார்வையிட்டார்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தாவது,**

மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்தின் சார்பில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பணிகள், பிரதம மந்திரி மாத்ரு வந்தன யோஜனா, தேசிய சுகாதாரப்பணி, தூய்மை இந்தியா திட்டம், பொது வினியோக திட்டம், தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணி, குடிநீர் மற்றும் சுகாதாரத்திட்டங்கள் ஒருங்கிணைத்து போஷன் மா' என்ற தேசிய ஊட்டசத்து மாத விழா செயல்படுத்தப்படுகிறது. செப்டம்பர் மாதம் முழுவதும்

இந்நிகழ்ச்சியை கொண்டாட திருப்பூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட துறை சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பணிகளின் கீழ் திருப்பூர் மாவட்டத்தில் 14 வட்டாரங்களில் 1512 அங்கணவாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றது. இதில் 1381 அங்கண்வாடி பணியாளர்களும் 1255 உதவியாளர்களும் பணிபுரிகின்றனர், இவர்களின் பயனாளிகளான கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், பிறந்தது முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகள் மற்றும் வளர் இளம் பெண்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்கு ஆண்டு தோறும் செப்டம்பர் மாதம் முழுவதும் ஊட்டச்சத்து மாத விழா கொண்டாடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் ஒரு சிறப்பு தலைப்பில் தேசிய ஊட்டசத்து மாத விழா செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதனை தொடர்ந்து இந்த வருடம் செப்டம்பர் 2021 மாதத்தில் “ஆரோக்கியமான வாழ்வை நோக்கி ஒருங்கிணைந்த பயணம்” என்ற தலைப்பில் ஊட்டச்சத்து மாத விழா கொண்டாடப்பட உள்ளது.

கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளை கண்டறிதல் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைப்பதை ஊக்குவித்தல்” என்ற இரு உயரிய கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்வதே இந்த வருட தேசிய ஊட்டசத்து மாதத்தின் முக்கிய நோக்கம். இதில் 10,407 கர்ப்பிணி தாய்மார்களும் 8,972 பாலூட்டும் தாய்மார்களும் 1,02,715 குழந்தைகளும் மற்றும் பொது மக்களும் பயன்பெறுவர்.

சத்தான உணவு, சரிவிகித ஊட்டச்சத்துள்ள உணவுகளை சரியான நேரத்தில் தவறாமல் உண்போம் என்னும் உறுதிமொழியை ஏற்று குத்துவிளக்கு ஏற்றி கலைநிகழ்ச்சிகளுடன், பாரம்பரிய சிறுதானியங்கள் கொண்டு 50 உணவு வகைகள், அங்கன்வாடி மையங்களில் வழங்கப்படும்.

இணை உணவு மாவு கொண்டு செய்யப்பட்ட 50 உணவு வகைகள் என மொத்தம் 100 உணவு வகைகள் கொண்ட பாரம்பரிய உணவுத்திருவிழா மற்றும் ஊட்டச்சத்து விழிப்புணர்வு கண்காட்சியை துவக்கி வைக்கப்பட்டது. பின்னர் பொதுமக்களுக்கு விழுப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பாரம்பரிய உணவு வகைகளுக்கான செயல்முறை கையேடு மற்றும் ஊட்டச்சத்து நிலைக்கு வாழ்கை சுழற்சி அணுகுமுறை குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கப்பட்டதென மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.லட்சுமணன் அவர்கள், மாவட்ட திட்ட அலுவலர் திருமதி. கு.மரகதம் அவர்கள், ஒருங்கிணைப்பாளர் திரு.ஹரிஹரன் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்துகொண்டார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**